
# வைத்தியன்

★ அகிலஇலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தின் ஓர் உயர்ந்த மாதவெளியீடு ★



மலர் 2] — அகஸ்தியர் — [இதழ் 4

VAIDYAN' A High Class Monthly Medical Journal of the All-Ceylon Siddha Ayurveda Medical Association (Jaffna)

## 'வைத்தியன்'

பின்வரும் விஷயங்கள் தழுவிய விரிவுரை
திங்களின் பிரதம வாரத்தில் நிகழ்த்துவான்.

1. பதார்த்த பண்பு (Materia Medica)
2. உடலின் உறுப்பும், கிரியையும் (Anatomy & Physiology)
3. சுகாதாரமும், ஆசாரமும் (Hygiene & Conduct)
4. நோயணுகா விதி (Prophylaxis)
5. பிணி அறி முறைமை (Diagnostic Clinics)
6. வைத்தியஞ் செய் முறைமை (Practice of Medicine)
   - i. மருந்து முறைகள் (Medicinal Recipes)
   - ii. மருந்துகள் செய்பாகம் (Pharmaceutical Processes)
   - iii. வைத்திய அனுபவமும், ஆராய்ச்சியும் (Medical Experiences & Researches)
   - iv. உறுப்பு வைத்தியமும், விசேஷ வைத்தியமும் (Specialities)
   - v. வைத்தியமும், சோதிடமும் (Medicine & Astrology)
7. பாலர் பரிபாலனம் (Child Care)
8. மாதர் மருத்துவம் (Women Welfare)
9. கருவிப் பரிசோதனை (Instrumental Examination)
10. பழைய நூல்களும், ஏட்டுச்சுவடிகளும் (Old Books & Ola Mss.)
11. கைகண்ட கைமுறைகள் (Specific Home Remedies)
12. வைத்திய வினாவிடை (Medicinal Catechism)
13. வைத்தியச் செய்திகள் (Medical News)

### வைத்தியனின் அன்பர்கட்கு:

'வைத்தியனுக்குக் கட்டுரை எழுதுவோர் தயவுசெய்து காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக மையாலெழுதி 15-ந் தேதிக்கு முன்னதாக ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். கட்டுரைகள் கூடியளவு மூன்று பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும். கை கட்டுரைகளைப் பிரசுரிக்காமல் விடுதல், அவற்றின் சில பகுதிகளை நீக்குதல் முதலிய உரிமைகள் ஆசிரியருக்கே உண்டு. தனிப்பட்ட வைத்தியர்களின் குண விசேஷங்களை விளம்பரப்படுத்தும் கட்டுரைகளைப் பிரசுரிக்க எத்தனித்தல் தவிர்க்கப்படவேண்டும். அங்ஙனம் பிரசுரமாகாதனவற்றைக் கட்டுரையாளர் தபாற்செலவனுப்பினால் திருப்பி அனுப்பப்படும். கட்டுரைகளிற் காணப்படும் அபிப்பிராய பேதங்கட்கு ஆசிரியர் பொறுப்பாளியாகமாட்டார். மாற்றுப் பத்திரிகைகள், மதிப்புரைக்கு வைத்தியநூல்கள் (2 பிரதிகள்), வைத்திய ஏடுகள், வைத்திய கருவிகள், வைத்திய பரீட்சை முடிவுகள், வினாவிடைகள் முதலியவற்றையும் ஆசிரியருக்கே அனுப்பவேண்டும்.

விலாசம். வைத்தியர் **K. S. பரிபூரணாநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (சிலோன்)

# பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுதேச வைத்தியர்களின் பதிவும் அரசாங்கமும் — ஆசிரியர் | |
| 2. | வைத்தியச் செய்திகள் | 102 |
| 3. | நீரிழிவுக்கு மருந்து — வைத்தியர் G. கண்ணுச்சாமிப்பிள்ளை | 103 |
| 4. | நீரிழிவு மாற்றும் குடிநீர் — S. A. R. | 104 |
| 5. | .. நண்டேக்கல் சூத்திரம் | 105 |
| 6. | தாம்பிரம் — வைத்தியர் ஐ. முத்தாஸ்வாமிக் குருக்கள் | 108 |
| 7. | சுரரோகநிதானம் | 109 |
| 8. | சூதகபந்த நோய்கள் — வைத்தியர் க. வேலாயுதபிள்ளை | 113 |
| 9. | பாலர் பரிபாலனம் — க. வே. | 114 |
| 10. | நீர் நிறக்குறி நெய்குறி சாஸ்திரம் | 117 |
| 11. | வைத்தியமும் ரஸாயனமும் — பண்டிதர் ச. இராமச்சந்திரன் | 122 |
| 12. | நரம்புகளின் உற்பத்தி வரலாறு 5 — வைத்தியர் ஆ. கனகரத்தினம் | 124 |


## "வைத்தியன்"


கௌரவ ஆசிரியர்:

வைத்தியர் K. S. பரிபூரணநந்தர் அவர்கள்

கௌரவ உறுப்பாளர்கள்:

வைத்தியர் A. கனகரத்தினம் அவர்கள் (கொழும்பு)

,, M. S. சுந்தரம் ,,

,, V. கனகசபை ,,

,, A. S. இராசையா ,,

கௌரவ செயலாளர்:

,, S. A. இராசையா அவர்கள்.

சரியான சந்தர்ப்பத்தில்
ஞாபகப்படுத்துகிறோம்

★

# பாடசாலைப் புத்தகங்கள்
# மற்றைய உபகரணங்கள்

யாவும்

எந்த வகையில் எவ்வளவு வேண்டுமோ
எம்மிடம் விசாரியுங்கள்!

## எஸ். எஸ். சண்முகநாதன்
அன் சன்ஸ்

257, காங்கேசன்துறை ரோட்,
யாழ்ப்பாணம்.

போன்: 16] ஸ்தாபிதம்: 1906. [தந்தி: "நாதன்"

“வாக்கு மனமு மிறந்த பொருள்காணி
லாக்கைக் கழிவில்லைக் காண்”

# வைத்தியன்

— திங்கள் வெளியீடு —


| மலர் 2 | விகிர்தி ஆண்டு தைத் திங்கள் | இதழ் 4 |
|---|---|---|


## சுதேச வைத்தியர்களின் பதிவும் அரசாங்கமும்

ஆசிரியர்

நம் அரசாங்கத்தின் சுதேசவைத்தியப் பதிவுச் சட்டப்படி தங்களைப் பதிந்துகொள்ள இன்று சுமார் 25,000 பேர் வரை மனுப் பண்ணிக் கொண்டிருப்பதாக அறிகின்றோம். திருத்தப்பட்ட 1949-ம் ஆண்டின் 49-ம் இலக்கத்தையுடைய சுதேசவைத்திய சட்டப்படி இப்பொழுது சுதேச வைத்தியர்களைப் பதிவதற்கு ஒரு பதிவுக்கமிட்டியை அரசாங்கம் நியமித்திருக்கிறது. சுகாதார மந்திரி அவர்களின் தீர்மானப்படி இக்கமிட்டி மாதம் இருமுறை (இரண்டு நாட்கள்) மட்டும் கூடி வைத்தியர்களை நேரில் பரீட்சித்து திருப்திப்படுத்தியவர்களைப் பதிந்துகொண்டு கமிட்டியைத் திருப்திப்படுத்தாதவர்களைப் பதியாமல் நீக்கிவிட ஏற்பாடாயிருக்கிறது. இந்த வகையில் முதல் தடவையாக இக் கமிட்டி திரு. டொனல்ட் ஒபயசேகரா அவர்களின் தலைமையில் 10-1-51ல் அன்று கூடி 14 பேர்களைப் பரீட்சித்ததில் 11 பேர் சித்தியடைந்தும் மூவர் சித்தியடையாமலும் போயினர். மேலே காட்டிய சட்டப் பிரகாரம் 1952 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதிக்குப்பின் எந்த வைத்தியரும் பதிவுக்கு மனுப் பண்ணிக் கொள்ள முடியாதெனக் காணப்படுகிறது. இப்பொழுது மாதம் இருமுறை மட்டும் பதிவுக் கமிட்டி கூட்டப்படலாமென்று சொல்லப்பட்டிருந்தும் தை மாதத்தில் ஒரு தடவை மட்டுந்தான் பதிவுக் கமிட்டி கூடிற்று.

---

(இ-ள்) வாக்கும் உள்ளமும் கடந்து நின்ற கடவுளைக் குண்டலி யோகத்தாற் கண்டால், தூல சூக்கும சரீரத்துக்கு அழிவில்லை.

தை மாதத்தில் ஒரு தடவை கூடிய கமிட்டி 14 வைத்தியர்களை மட்டும் பரிசோதிக்க முடிந்த தானல் மாதம் இரு தடவை கூடி ஒவ்வொரு தடவையும் 20 வைத்தியர்களைப் பரிசோதிக்க முடிந்தாலும் 1952 மார்கழி மாதம் 31 ந் திகதிக்குள் சுமார் 1000 வைத்தியர்களைப் பரிசோதிக்கலாம். எஞ்சிய பல ஆயிரக்கணக்கான வைத்தியர்களை அவ்வாண்டின் பின் பரிசோதிக்காது விடப்படுமா அல்லது அச்சட்டமே மாற்றிஅமைக்கப்படுமா என்பது விளங்கவில்லை. இவ்விதமான மந்த நிலையில் மந்திரி அவர்கள் சுதேச வைத்திய விஷயங்களை விட்டுவைத்திருப்பதும் மேலை நாட்டு வைத்தியத்திற்குப் போதிய பணத்தை வாரி அள்ளி வீசுவதும் பொதுமக்களின் விருப்பத்திற்கு மாருனதேயாகும் - நூற்றுக்கு 80 வீதமான மக்கள் சுதேச வைத்தியம் செய்வித்து வருவதாக நாம் மாத்திரம் கூறிவிட முன் வரவில்லை. பின்னர் 4-1-51 இல் வெளியான "டெயிலி நியூஸ்" ஆங்கிலப் பத்திரிகையில் அதன் ஆசிரியரே 80 வீதமான மக்கள் சுதேச வைத்திய சிகிச்சையை நாடுகின்றனர் என்று கூறியுள்ளார். ஆகவே அரசாங்கம் பொதுமக்களை இன்னும் கண்ணை மூடிக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

நியாயமான முறையில் கனம் சுகாதாரமந்திரி திரு **S. W. R. D.** பண்டாரநாயக்கா அவர்கள் சுதேச வைத்தியர்களின் முறைகளைக் கவனித்து உடனே ஆவன செய்தல் வேண்டும்.

சுதேச வைத்தியர்கள் பதிவுக் கமிட்டி மாதத்தில் 10 நாட்களாகுதல் கூடி அதிகமான எண்ணிக்கையுடைய வைத்தியர்களை விரைவில் பதிந்து 1952 ம் ஆண்டு முடிவதற்குள் பதிவு விஷயத்தை முடித்து விடும்படியான ஏற்பாட்டைச் சுகாதார மந்திரி அவர்கள் அவசியம் கவனிக்க வேண்டுமாய்ச் சகல வைத்தியர்களும் விரும்புகின்றனர். சுதேச வைத்தியப் பதிவை மேற்படி கமிட்டி அடுத்து நடத்துவதற்குப் போதிய பணம் இல்லாமல் இருப்பதாயும் தெரிவிக்கப்படுகிறது. இப்பொழுது மனுச் செய்த ஒவ்வொரு வைத்தியரும் பத்து ரூபாய் பிரவேசப் பணம் கட்டியே பதிவுக்கு ஆஜர் ஆகிருர்கள். இந்நாட்டிற் பிறந்த நாம் பிதிரார்ஜித சொத்தாக நமக்குக் கிடைத்த சுதேச வைத்தியத்தை அழிய விட்டு பிற நாட்டு வைத்தியத்தைக் கைக் கொண்டு அதற்கு

அதிக பணம் செலவு செய்வதும் எம் பண்டைய அரசர்கள் முதற் கொண்டு போற்றி வந்த ஆயுர்வேத வைத்தியத்தின் மகிமை அறியாது இங்ஙனம் அலட்சியம் செய்வதும் யாவராலும் வெறுக்கத்தக்கதே. டெல்லியில் ஆங்கில சத்திரவைத்திய நிபுணர்கள் தங்கள் வருடாந்த மகாநாட்டைக் கூட்டியபோது ஸ்ரீ நேரு அவர்கள் தலைமை தாங்கிப் பேசியபேச்சை எம் 1-1-51 'டெயிலிநியூஸ்' பத்திரிகையில் காணலாம்; அன்று அங்கு கூடியிருந்த டாக்டர்களுக்கு ஆயுர்வேத வைத்தியம் மேலானதென்றும் அது பல ஆண்டுகளாய்க் கையாளப்படாது தேங்கிக் கிடந்த நீர் போன்று இருக்கும் ஒரு காரணத்திற்காகத் தள்ளிவிட முடியாதென்றும் பழைய காலத்திலிருந்த ஆயுள் வேதாசிரியர்களாகிய சுஸ்ருதர், வாக்படர், நாகார்ச்சுனர் முதலிய முனிவர்கள் இன்றுள்ள வைத்திய விஞ்ஞானிகளிலும் பன்மடங்கு விசேடம் உள்ளவர்களென்றும் ஆணித்தரமான புத்திமதி கூறி ஸ்ரீ நேரு அவர்கள் இடித்துரைத்திருப்பதைக் காணலாம். இதை யொட்டியே அப்பத்திரிகை ஆசிரியரும் ஆர்வங் கொண்டவராய் 4-1-51 இல் "ஆயுள்வேத ஆராய்ச்சி" என்ற ஆசிரியர் தலையங்கத்திலும் எழுதியிருந்தார்.

ஆகவே திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா அவர்களை நம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கண்டு சுதேச வைத்தியப் பதிவை வருஷக் கணக்கில் வைத்திழுக்காமல் விரைவில் நடத்தி முடித்துப் போலி வைத்தியர்களின் கையிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றும்படி செய்யவேண்டியது அவர்கள் கடமையாகும். விரைவில் இக் குறை நீக்கப்படுமென்றே கருதுகின்றோம்.

---

## மேலும் நன்கொடை அனுப்பிய வைத்திய அன்பர்கள்

| | |
|---|---|
| *M. S.* சுப்பிரமணியம், சங்கானைமேற்கு, பண்டத்தரிப்பு. | 5-00 |
| *A.* வல்லிபுரம், பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை. | 5-00 |
| *S.* கனகசபை, ஊர்காவற்றுறை. | 10-00 |

# வைத்தியச் செய்திகள்

## புங்குடுதீவு அமிர்தருண வைத்தியசாலை

ஷெவிழா இந்த மாசம் 28-ம் நாள் (13-12-50) புதன்கிழமை காலை 9 மணியளவில் புங்குடுதீவு அரசினர் ஆங்கில பாடசாலைக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தில் கிராமச்சங்கத் தலைவர் திரு. ச. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

அத்தருணம் பிரபல வைத்தியர்கள், வர்த்தகர்கள், கிராமச் சங்கத் தலைவர், ஷெ அங்கத்தவர்கள் முதற் பல பிரமுகர்கள் சமுகமளித்து விழாவினைச் சிறப்பித்தனர். இவ் வைத்தியசாலை அதிபராய்க் கடமையாற்ற முனைந்திருக்கும் **டாக்டர் ச. சரவணமுத்து** L H M; L. B M அவர்கள் மலாயா, இந்தியா. இலங்கை ஆகிய இடங்களில் விசேஷ பயிற்சி பெற்று, சித்தஆயுர்வேத, ஹோமியோபதி, பயோகெமிஸ்ற்றி (ஜெர்மன் வைத்திய) முறைகளின் படியும் விசேஷ இன்ஜெக்ஷன் மூலமும், தன் அனுபவப்படியும், யுத்தி புத்தியிற் சிறந்தவராய், சில ஆண்டுகளாக வைத்தியமுறை நிகழ்த்தி வரும் பெருமையைப்பற்றியும் இவரால் நமது கிராமத்திலுள்ள ஏழைகட்குக் கிடைக்கக்கூடிய இலவச வைத்திய வசதியைப் பற்றியும், வைத்தியர் அவர்களின் தயாளகுணம், சீவஇரக்கம், வாசனு சக்தி முதலிய பெருந்தன்மைகள் அவரது வைத்திய பரம்பரையாலேற்பட்டதென்றும் அவரைப் பலவாறு ஷெயார் புகழ்ந்து பேசினர் வைத்தியரவர்கள் சமுகமளித்தோர்களுக்கு நன்றிகூறிச் சிற்றுண்டி, பானம், சந்தனம், தாம்பூலாதி வழங்கி வழியனுப்பினர். இலங்கை, மலாயா, இந்தியா முதலிய இடங்களின் பல பகுதிகளிலுமிருந்து ஆசிமொழிகளும், நன்கொடைகளும் வந்துகொண்டேயிருக்கின்றன இதனையறியும் அன்பர்கள் எவரும் வைத்திய உதவி வேண்டியபோது காலந்தாழ்த்தாது **டாக்டர் ச. சரவணமுத்து** அவர்களின் அமிர்தருண வைத்தியசாலையை அணுகிச் சுகமும், ஆதரவும் பெறுவார்களாக.

— கடிதம்.

---

## நெடுந்தீவு மேற்கு, சரஸ்வதி சுதேச வைத்தியசாலை:

சென்ற கார்த்திகை மீ 11-ம் திகதி சனிக்கிழமை ஆசிரியர் திரு. ஆ. வீரசிங்கம் அவர்கள் "சரஸ்வதி சுதேச வைத்தியசாலை"யைத் திறந்துவைத்தார். கூட்டத் தலைவர் திரு. அ. கந்தையா அவர்கள் தமது முன்னுரையில் நெடுந்தீவு மேற்கில் பொதுஜனங்களுக்கு மிக அவசியமாக ஒரு வைத்தியசாலை தேவை எனவும், வைத்தியர் கந்தையா வேலுப்பிள்ளை அவர்கள் செய்துவரும் பெருந் தொண்டைப்பற்றியும் விரிவாகக் கூறினர். திரு. ஆ. வீரசிங்கமவர்கள் பேசுகையில் ஷெயாரின் ஊக்கத்தையும் தொண்டையும் பாராட்டியதோடு, அதற்குப் பொதுஜனங்களின் ஒத்துழைப்பு மிக

# நீரிழிவுக்கு மருந்து

— வைத்தியர் G. கண்ணுச்சாமிப்பிள்ளை. திருவாரூர். —

நன்கு சுத்தித்துப் பல புடமிட்ட கிருஷ்ணப்பிரகசெந்தூரம் ஒரு பலம், எவ்வகையிலேனும் புடமிட்ட காந்தசெந்தூரம் ஒரு பலம், கலந்து பொற்றிலைக் கையாந்தகரைச்சாறு, நாவற்பட்டைச் சாறு, சீந்திற்கொடிச்சாறு ஒவ்வொன்றிலும் தனித்தனியரைத்து புடமிட்ட செந்தூரமும்; ஒருபலம் சீந்திற்சர்க்கரையும்; சுத்தமான செம்மண்பூமியிலுள்ள புத்தான்சோறு ஒரு பலத்தை நாவற்பட்டைச் சாற்றால் 3, 4 முறை அரைத்தரைத்து உலர்த்தித் தூளாக எடுத்தது ஒன்றரைப்பலம்; ஆவரைப் பூமொட்டு இலைக்கொழுந்து பிஞ்சு வேர்ப்பட்டை விதை இவை சமனாக இடித்து வடிகட்டிய தூள் மூன்றுபலம்; கடலழிஞ்சிப்பட்டைத்தூள் ஒருபலமும் கலந்து அரைத்து பத்து உளுந்தெடைவீதம் தேனிற்கலந்து சாப்பிட்டுவர நீரிழிவு குணமாகிவிடும். காப்பியை நீக்கவும்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வும் அவசியமெனவும் குறிப்பிட்டார். பின்பு ஷெயார் வைத்தியசாலையை மேற்பார்த்து நடத்துவதற்கு ஒரு கமிட்டியை நிறுவினார்கள். கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் சமுகமளித்தார்கள்.

## இலவச வைத்தியசாலைக்கு நன்கொடை:

பூநகரியிலுள்ள “பரமேஸ்வரி வைத்தியசாலை”க்கு அவ்வூர்க் கிராமச்சங்கத்தின் நன்முயற்சியால் கனம் சுகாதார மந்திரி அவர்கள் வருடமொன்றுக்கு ரூபா 350/- நன்கொடைப்பணம் தந்துதவ முன்வந்திருக்கிறார்கள்.

வைத்திய வசதிக்குறைவுள்ள பூநகரி முதலிய கிராமங்களில் பெரும்பாலான மக்கள் கைமருந்துகளையே உபயோகித்து வருகிறார்கள். குடிநீர் முறைகளை அக்காலந்தொட்டு இவர்கள் பல வியாதிக்கும் செய்யத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். சுதேச வைத்தியத்தில் அதிக விருப்பமுள்ள பெரும்பாலான மக்கள் வாழும் பூநகரியில் ஒரு சுதேச வைத்தியசாலை இலவச சிகிச்சை செய்ய முன்வந்திருப்பதும், கிராமச்சங்கம் அதில் கருத்தூக் கொண்டிருப்பதும் ஒரு பெரும் முன்மாதிரியாகவே காணப்படுகிறது. ஏனைய கிராமச் சங்கங்களும் இம்முன்மாதிரியைப் பின்பற்றி ஆங்காங்கு இலவச சுதேச வைத்தியசாலைகளைத் திறக்கவேண்டுமென விரும்புகிறோம்.

## நீரிழிவு மாற்றும் குடிநீர் — S. A. R.

ஆவாரைப் பஞ்சாங்கம்* வகைக்கு 1½ பலம்; சரக்கொன்றை வேர்ப்பட்டை, ‡நாவற்கொட்டை, கடலழிஞ்சில்பட்டை, கோரைக்கிழங்கு, சாதி(வெண்)கோஷ்டம், மருதமரப்பட்டை வகைக்கு 1¼ பலம்; முற்றிய சீந்தில்தண்டு, பழுத்த †நெல்லிக்கனி வகைக்கு 2 பலம். கடையில் வாங்கும் கோஷ்டம் தவிர மற்றச் சரக்குகள் எல்லாம் பச்சையாக எடுத்து நிழலில் 8, 10 நாள் நன்றாகக் காய்ந்து 1 நாள் கடும் வெயிலிலும் காய்ந்தவுடன் இடித்து அரித்தெடுத்து மூடி வைக்கவேண்டியது. இதை நோய் வன்மைக்குத் தகுந்தபடி 1. 2 திரிகடி அல்லது வெருகடிப் பிரமாணம் எடுத்து வெந்நீரிலிட்டு மூடி எட்டிலொன்றாக வற்ற அவித்து; சமன்அளவு காய்ச்சிய (ஆடைநீக்காத) பசுப்பாலுடன் கலந்து நாள் 3 முறை 1மண்டலமருந்தி இச்சாபத்தியம் காத்துவர மதுமேகம் (diabetes mellitus) அதிமேகம் (d insipidus) 2ம் உட்பட எல்லாப் பிரமேகமும் தீரும். சொந்த அனுபவத்திற் கைகண்டது; உத்தரவாதமானது. இக்குடிநீருக்குப் பத்திய உணவாக யூகிமுனி வைத்திய சிந்தாமணி 800இல் நீரிழிவின்கீழ்ச் சொல்லிய 'மதிமேகம் இருபதுக்கும் பத்தியங்கான்' என்னும் தொடக்கத்தை உடைய குளகச் செய்யுளிற் கூறியதை அநுசரிக்கலாம். [குறிப்பு: பலம்–8களஞ்சு; சாமம்–3மணித்தியாலம்; திரிகடி–3விரல்களாற் கிள்ளுவது; வெருகடி–4விரல்களாற் கிள்ளுவது; மண்டலம்–40நாள்; இச்சாபத்தியம் – (மழப்)புளி, புகை(யிலை), (பெண்)போகம் நீக்கிய பத்தியம். எண்ணெயும் நீக்கவேண்டியதென்றாலும் ஷெ நூல் பத்தியத்தில் இந்நோய்க்கு எண்ணெய் சேர்க்கலாம் என்று சொல்லியிருப்பதால் அதனை இங்கு சொல்லவில்லை. நாள் 3 முறை என்று சொல்லியிருப்பினும் மத்தியான்ன நேரம் பால் குடிப்பது கூடாதாகையால் காலை மாலையும் படுக்கப்போகும்போதும் அருந்த வேண்டும்.]

இந்தக் குடிநீர் பின்வரும் பாடலை ஆதாரமாகத் தழுவியது:-

"ஆவிரங் கொன்றை நாவல் அலைகடல் முத்தம் கோட்டம்
மேவிய மருதம் தோலும் விரைந்துடன் ஒக்கக் கொண்டு
பூவிரி குழலி னாளே பொருந்துநீர் தன்னை உண்ணக் [தேரையர்
காவிரி நீரும் வற்றிக் கடல்நீரும் வற்றும் தானே" கஷாயம்100]

---

* ஆவாரைப் பஞ்சாங்கம் – 1. ஆவரச மரத்தின் வேர்ப்பட்டை, 2. இலைக்கொழுந்து, 3. அடுத்தநாள் விரியக்கூடிய காம்பு நீக்கிய மொட்டு பூ (அல்லது அல்லி மகரந்தத்துடன்கூடிய உடன் விரிந்த பூ). 4. மரப்பிசின் (பிரமாணப்படி பிஞ்சேயாயினும் பிசினே விசேஷம். இது கிடையாவிட்டால் விளாமரப்பிசின் சேர்க்கலாம்). 5. முற்றிக் காய்ந்துவரும் காயின் விதை.

‡ கனிந்து வலிய விழுந்த புதிய நாவற்பழத்தை நிழலில் உலர்த்தி தோல் தசையுடன் நன்றாக வரண்ட கொட்டை.

† இதை நிழலில் உலர்த்திக் காய்ந்து வெடித்தபின்பு விதையை அகற்றி நிறுத்தெடுக்க வேண்டும்.

# அகஸ்திய மகா முனிவர் திருவாய்மலர்ந்தருளிய 'சர்வபக்ஷணி' எனும் நண்டுக்கல்லின் சூத்திரம்.

— வைத்தியர் ந. இராசலிங்கம், கொழும்பு. —

நம் தமிழ்நாட்டில் ஆதிகாலந்தொட்டு நண்டுக்கல்லை இரண்டொரு ரோகத்திற்கு மாத்திரம் உரைமருந்தாகக் கொடுத்து வருவது வழக்கம். எனினும் இந் 'நண்டுக்கல்லுப் பக்ஷணி' என்னும் சூத்திரம் எல்லோரிடமுமிராதெனக் கருதியே 'வைத்திய'னில் வெளியிடுகின்றோம்.

## நண்டுக் கல்லின் பிறப்பு

பாடல்பெற்ற சிவஸ்தலமும், 'சப்த கன்யா தீர்த்தம்' என்னும் ஏழுவித வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள திரிகோணமலையை உங்கள் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். அங்கிருந்து 19-வது மைலில் குச்சவெளி என்னும் கிராமமிருக்கிறது. அக்கிராமத்தில் நாச்சியார் மலை என்ற ஒருமலையின் அடிவாரத்திலிருந்து ஒரு அருவிநீர் பெருக்கெடுத்து வாய்க்கால் வழியாக ஓடிச் சமீபத்திலிருக்கும் சமுத்திரத்தில் கலக்கிறது.

இந்நீரானது வருஷத்தில் ஒருதரமோ, 2 வருஷத்தில் ஒருதரமோ மஞ்சள் நிறங்கலந்த செவ்வூற்றுநீராக வரும். அமாவாசை காலத்திலே பெருகும். இந்நீரானது சமுத்திரத்தில் விழுந்ததும், இந்நீர்பட்ட மச்சங்கள் சகலதும் கல்லாகிக் கரையோரங்களில் கிடக்கும். இவற்றுள் நண்டை மாத்திரமே முனிபுங்கவர் வைத்திய சிகிச்சைக்கு எடுத்துக்கொண்டார். இந்நண்டுக்கல்லை எடுத்து மருந்துக்கடைகளிலும் விற்பனை செய்கிறார்கள். செவ்வூற்று நீர் ஓடும்போது அதில் ஒரு பரதேசி தனது சின்னிவிரலைக் கொடுக்க அவ்விரல் கல்லாகியது. இது 25 வருஷத்துக்குமுன் அவ்வூரார் நேரிற்கண்ட சம்பவம்.

## நீரடைப்புக் கல்லடைப்புக்கு

உற்றதொரு சமுத்திரமாந் தனிற்பிறந்த
    உயிதமென்ற கல்நண்டாம் அதனின்செய்கை
உற்றவர்கள் அறிவார்கள் வேறு
    கசடருக்குத் தெரியா தையா!
குற்றமற்றோர் தெரிந்தெடுத்துச் செய்துகொள்வார்
    கூறுகிறேன் நீயுமதை நன்றாய்க்கேளு!
சுற்றமாம் பொரிகாரம் விராகனிரண்டு
    சூட்சமுடன் நற்சலமொரு படியும்வாரே. (1)

வாரப்பா எட்டொன்றாய்க் காய்ச்சிநீதான்
வளமான கல்நண்டைக் குன்றிஎடை உரைத்து
நீரப்பா வென்றதொரு கஷாயத்திற் கரைத்து
நிர்ணயமாய்க் கொடுத்துவிட நீரடைப்புப் பின்னும்
பாரப்பா வென்று சொன்ன கல்லடைப்பன்
படுத்தாது படுத்திவைத்த நீர்ச்சுருக்கும்
ஆரப்பா இதுபொறுக்கப் போறதென்று
அழுதபய மிடும்துன் மாங்கிஷ அடைப்புமாமே. (2)

ஆமப்பா கிரிச்சிரமே பதினெட் டாகும்;
அசடான துன்ப மெல்லாம் போச்சு
பாமேவும் தேன்தனில் கல் நண்டதனைப்
பண்புடனே அந்திசந்தி குன்றிஎடை யுரைத்து
தாமேதான் மத்தித்து மூன்றுபொழு துண்ண,
தட்டழித்து போகுமடா சன்னிபதின் மூன்றும்
நாமேதான் வாதமெண்ப துக்கும்
நலமான மூக்கறைச் சாறணையின் வேரே. (3)

வாதமேண்பதுக்கும்

வேருடனே மாவிலங்கைப் பட்டை சேர்த்து
விரும்பிய கஷாயத்தில் கல்நண் டாமதனை
சீருடனே குன்றியளவெடுத் துரைத்துக் கொண்டு
சிறப்புடனே க்ஷாயமதில் கலக்கி நீயும்
ஆருடனும் பேசாமல் மூன்று நாள்தான்
அமைவுடனே அந்திசந்தி கொள்ளும்போது
ஊருடனே பகைத்தவன் போல் பயந்து ஓடி
ஒளித்துவிடும் வாதமெண் பதுவுந்தானே. (4)

தானேதான் போச்சுதடா அற்புதமாம் வாதம்
தனுர்வாதம் மேகவாதம் அருணவாதம்
ஊரேதான் பிரட்டி வைக்கும் குதிரைவாதம்
உற்பனங்கள் சொல்லுமந்த வாய்வுதானும்
கோணவே நின்றதொரு நாடிமுட்டல்
குற்றமுள்ள முகவாத சன்னிதானும்
நானேதா னென்றிருக்கும் கழுத்து வாதம்
நவில்நரம் பிளுப்புவிறைப் பதுவும் போமே. (5)

சுரம் நீரழிவுக்கு

போச்சுதடா உன்மத்த மந்தமென்ற
பொல்லாத வாதமென்ற தெங்கே போச்சு
காச்சென்ற பேர்பெற்றசுர மறுபத்துனாலும்
கலங்குமடா சீரகக் கஷாயத்தில் குன்றி

வீச்சுதென் று சொல்லுகின்ற கல்நண்டா மதனை
விரைந்தரைத்து பணவெடைதான் கஷாயத்தி
மாச்சலில்லா மூன்றுநாள் தானருந்து [லுரைத்து
மாண்டுதடா சுரங்காய்ச்ச லெல்லாந்தானே. (6)

## வேறு நீரழிவுக்கு

தானென்ற எலிச்செவி இலையை அரைத்து நன்றாய்
தவறாமல் கொட்டைப்பாக் களவதிலே மைந்தா
ஏனென்று சொல்லாமல் கல்நண்டா மதனை
இயல்பாகக் குன்றியள வரைத்துச் சேர்த்து
ஊனென்ற சதை உருக்கும் வாத பித்தம்
உற்றசிலேற் பனமும் நீரிழிவுக் கெல்லாம்
தேனென்ற மொழியுடைய பெண்கள் கையால்
தினம்மூன்று நாட்கொள்ள நீரழிவும் போச்சு. (7)

## குட்டம் பதினெட்டுக்கும்

போச்சுதடா குட்டமென்ற பதினெட்டுந்தான்
புகழ்பெரிய சிவனார் வேம்புத் தைலந்தன்னில்
வாச்சுதடா வென்றுசொல்லி காசெடைதானப்பா
மகத்தான கல்நண்டைக் குன்றி யளவுரைத்து
ஏச்சுதடா வென்றுசொல்லி யிருந்திடாமல்
இரண்டு மொன்றாய்ச் சேர்த்தரைத் தறுநேரம்
நீச்சுத லில்லாமல் கொடுக்கும் போது [நீதான்
நிலைகெட்ட குட்டம் முதல் போகும் பாரே. (8)

## தழுவணை தேமலுக்கு

பாரப்பா ஆவிரையின் சாற்றிலே தான்
பண்பான கல்நண் டதனைச் சேர்த்து
காரப்பா என்றுசொல்லி மூன்றுநாள்
கருதியே குடித்திடவே தளுவணையா மதுவும்
ஆரப்பா தீர்ப்பதென்று எண்ண வேண்டாம்
அதிபெரிய கிரந்திமுதல் பெரும் வியாதி
ஆரப்பா நில்லாமல் அறுகாத வழிதான்
ஓடிமிகத் திரும்பாமல் வியாதி போச்சே. (9)

## சகல விஷத்திற்கும்

போச்சுதடா விஷமதென்ற தெல்லாத்துக்கும்
புகழ்பெரிய தேள் முத்திச் சாறு
வாச்சுதடா வென்றுசொல்லி கல்நண்டைத் தானும்
வகையாகச் சேர்த்து மெள்ளக் கொடுக்கும்போது

பதார்த்த பண்பு:

# தாம்பிரம்

— வைத்தியர் ஐ. முத்துச்சாமிக் குருக்கள் —

அதிக பிரயோசனமுள்ள இந்த லோகம் சுரங்கங்களில் சாதாரணமாய் அகப்படுகிறது. தோஷமுள்ள இரசமும் தோஷமுள்ள கெந்தகமும் சமபாகமாகச் சேர்ந்து சுபாவச்சூடு அதிகரித்துத் தங்கவர்ணமெரிந்து போவதால் தாம்பிரமுண்டாகிறதென்பது ரசவாத சாஸ்திரிகளின் தீர்மானம். இது முன்னோர்களுக்கு எண்ணிறந்த காலமாகத் தெரிந்து இதனைப், பஸ்ப, செந்தூர மருந்துகளாகச் செய்து கடின வியாதிகளில் உபயோகித்து வெற்றி அடைந்து வந்தார்கள். இன்னும் இதுசம்பந்தமாக உருக்கு மாத்திரை, களிம்புகள், தூபங்கள் முதலிய பலவித ஔடதங்களாகவும் உபயோகித்து வந்தார்கள். ஆனால் அந்த முறைகளெல்லாம் இரகசியமாகவும். மறைபொருளாகவும் வைக்கப்பட்டு வந்தன. இன்னும் அவ்விதமே வைக்கப்பட்டும் வருகின்றன. ஆயினும், உலோகோபகாரமாகப் பல பாகங்கள் கைமுறையாகக் காண்பிக்கப்பட்டு உபயோகமாகியும் வருகிறது. அவ்வித முறைகளை நமது அருமைச் சிநேகித பண்டிதர்கள் உபயோகித்துக் கஷ்டமான வியாதிகளை நீக்கி உலகத்தில் வெற்றி பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் இவ்வெளியீட்டை இங்கு எழுதினேன். வெகு காலத்துக்குமுன் இங்கிலீஷ் வைத்தியர்கள் இவ்வித அரிய முறைகளில் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தபோதிலும் மகா கொடிய ரோகங்களெல்லாம் மேற்கண்ட ஔஷதங்களால் இப்போ தீர்வதை அனுபோகத்தில் நேரே பார்த்துவருவதால் டாக்டர்களுக்கும் இந்த ஔடதங்களில் இப்போது நம்பிக்கையுண்டாகி விட்டது.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஆச்சுதடா என்று சொல்லி விஷங்க ளெல்லாம்
அறுநூறு காதவழிக் கப்பால் போமே. (10)

போமேதான் கிரிப்பூண் டதனின் சாற்றில்
புகழ்பெரிய கல்நண்டதனை யுரைத்து நன்றாய்
தானேதான் கொடுத்திட விஷங்க ளெல்லாம்
கட்டுண்டு போகுமே விரும்பிக் கொள்ளு
போமேதான் உத்தமா காணிச் சாற்றில்
உகந்தகல் நண்டதனை உரைத்துக் கூட்டி
மதான் உள்ளுக்குக் கொடுத்திட்டால்
ஆகவுமடா பேய்பூதம் கடி விஷமுந்தானே. (11)

(தொடரும்)

ஷை 11-வது பாடல் 7-வது வரியின் திருத்தம்:
'ஆமேதான் உள்ளுக்குக் கொடுத்திட்டால்'

# சுரரோக நிதானம்

[விளக்கப் பொழிப்புரையுடன் கூடியது]

இஃது அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தின் முதலாவது வெளியிடு.

○

## சிலேற்பன சந்நிபாதசுரம்

"உடல்சேர் சன்னி பாதசுரத் துண்டாங் குணத்தை யுரைத்திடுகில்
பிடர்நோங் தலைநோ மறிவுகெடும் பிதற்று மிரும லிளைப்பாகும்
படரும்புண்போ லுடநோவாம் பருகுந்தண்ணீர்த் தாகமுண்டாம்
விடமே போல வாய்கசக்கு மிகவும் வெதுப்பு முழலையுண்டே"

"உண்டே கழிச்ச ணுவலரு மோது மிதற்கு வாய்நாசி
விண்டே புண்ணு நாக்கறுக்கு மிகவு நாக்குப் புண்ணுகும்
தண்டேன் மொழியாய் சத்தியுமாந் தலையுங் கழுத்து மிகவேர்க்கும்
கண்டா யிதுவே சிலேற்பனத்திற் காணுஞ் சன்னி பாதசுரம்"

(போ-ரை);- குளிர்ந்த தேன்போலும் இனிய மொழியையுடையவளே! சிலேற்பன சன்னிபாதசுரத்தின் குணத்தைச் சொல்லக்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நமது சகோதரர்களிற் சிலர் முறைபிசகாய் தாம்பிரத்தை பற்பித்தும், செந்தூரித்தும் உபயோகிப்பதால் அவற்றால் நற்குணங்கள் உண்டாவதற்குப் பதிலாகத் துர்க்குணங்கள் உண்டாவதுகண்டு, நமது நண்பர்களும் நம்பிக்கை குறைந்தவர்களாய்க் காணப்படுகின்றனர். கிரமமாகவும் முறையாகவும் கைபாகம் செய்பாகம் தவறாமற் செய்யப்படும் பற்பசெந்தூரங்களை பத்தியமாக உபயோகப்படுத்தினால் ஒருபோதும் கெடுதி நேரிடாது.

தாம்பிரத்தின் சுபாவத்தையும் அதன் வகைகளையும் இனி எழுதுகின்றோம்.

தாம்பிர வகைகள்:— தாம்பிரமானது பிறப்பு வைப்பு என இருவகைப்படும். இன்னும் அது அநேகவித மூலிகைகளிலிருந்தும், அநேக கற்களிலிருந்தும் எடுக்கப்படுகிறது. மனோசிலை, கெந்தகம், துருசு, வெண்காரம், கடுக்காய் பூணாகம். மயிலிறகு, நிமிழை, தொட்டிப்பாஷாணம். தாளகம், இரும்பு ஆகியவைகளிலிருந்தும், சிலவகை ஈக்கள், சிலவகைப் பாம்புகள் ஆகியவைகளிலிருந்தும் தாம்பிரம் எடுக்கப்படுகிறது. இவைகளுள் மயிலிறகுத் தாம்பிரமே மிகச் சிரேஷ்டமானது. அதிலும்பார்க்க வெண்காரத்தில் எடுக்கப்படும் தாம்பிரம் மிகமிகச் சிரேஷ்டமானது.

(தொடரும்)

கேள். தேகத்தின் பிடரி, தலை முதலிய உறுப்புக்கடோறும் புண் போல் நோவுமிகும். அறிவு கெட்டுப் பிதற்றிப் பேசும். இருமல், இளைப்புத் தோன்றி அதிக தாகமெடுக்கும். வாயில் விடஞ்செறிந்த தன்மைபோல் கசப்புச்சுவை கண்டு நா வரண்டு கறுக்கும். அதிக வெப்பம், கழிச்சல், உழலை உண்டாகும். அதரம், நா, மூக்கு இவைகள் வெடித்துப் புண்ணாகும். சத்தியுடன் கழுத்து. நெற்றி இவைகளில் வேர்வை காணுமெனவ அறிக.

(வி-ம்): இது சிலேற்பனதோஷம் அதிகரித்தும் ஏனைய தோஷங்கள் கோளாறடைந்து தொந்தித்தும் உண்டாவதாற் சிலேற்பன சன்னிபாதசுரமெனப் பெயர்பெற்றது.

## சந்நிபாதசுரங்களில் மரணக்குறி

"மேலே சேற்ப நாடியுறின் மார்பின் முகத்தில் வேர்வாகில்
சாலக் குளிர்ந்து நடுங்கியேழுந் திருக்கி னுப்பற் றுன்கறுக்கில்
சீலவுதர மிகவுளைந்தே யுதிரங் காணில் சிரங்குனியில்
காலு முகமும் வீங்கிமுகஞ் சிவக்கின் மரணங் கண்டுகோள்ளே.

(போ-ரை):- சிலேற்பன நாடி மேல்நோக்கி நடந்திடினும் - மார்பிலும், முகத்திலும் பிசுபிசுத்த வேர்வையுண்டாயினும். தேகம் மிகக் குளிர்ந்து நடுக்கமுறினும், நோயாளி படுக்கையிற் கிடைகொள்ளாதிருப்பினும், நாவும் பல்லும் கருநிறமடையினும், அழுகிய வயிற்றில் வலி, கடுப்பு முதலிய வேதனையுடன் இரத்தக் கழிச்சலுறினும், கைகால், முகம் இவைகளில் வீக்கமுண்டாயினும், முகம், வயிறு மினுமினுத்துச் சிவக்கினும் சன்னிபாத சுரங்களில் மரணமுண்டாகுமென அறிந்துகொள்க.

(வி-ம்):- இம் மரணக்குறிகள் ஏனைய சன்னிபாத சுரங்களுக்கும் பொருந்தும்.

### சிலேற்பன சுரத்திற் சாத்தியம் 10.

### 1. சிலேற்பன பித்தசுரம்

"வெப்போடு வேர்வையுண்டாய் வெளுப்பது நாவிலுண்டாய்த்
துப்பறு மிருமலுண்டாய்ச் சொல்லுநாக் கசப்புமுண்டாய்
அப்புறு தொண்டை கட்டி யருஞ்சுரந் தோன்றுமாகில்
செப்புறு குணங்க பத்தின் சேர்பித்த சுரமாமேன்னே"

(போ-ரை):- சுரத்தோடு வியர்வை கண்டு நாக்கு வெளுத்துக் கசக்கும். தொண்டை வரண்டு கட்டிக் கபம் இறுகி வெளிவாராது இருமலுண்டாகும். இக்குணங்களையுடைய சுரத்தினை சிலேற்பன பித்த சுரமெனக் கூறுக.

## 2. சிலேற்பன வாதசுரம்

' தலையை மிகவு நடுக்குவதுஞ் சரீர முழுதும் விறைப்பதுவும்
அலையு மிரும ரேன்றுவது மங்கை யோடுகால் குளிர்வதுவும்
குலையுஞ் சுரத்தி லிக்குணங்கள் கூடுங்க பத்தில் வாதமேன
மலையின் முனிவ ஞராய்ந்து வகுத்தா ஞயுள் வேதமதே''

(போ-ரை):- சுரத்துடன் அதிக தலைநடுக்கமும், தேகம் முழுதும் விறைத்துப்போதலும், இருமலுண்டாகி அவயவங்களை அலைவு செய்வதும், அழகிய கையுங்காலும் குளிர்ந்திருத்தலும், குலைப்பலுண்டாவதும் ஆகிய சுரத்தைப் பொதியமலை வாசராகிய அகத்திய முனிவர் ஆராய்ந்து வகுத்தருளிய ஆயுள்வேதத்திற் சிலேற்பன வாத சுரமெனக் கூறும். இதை நீயறிந்துகொள்க.

## 3. சிலேற்பன சயசுரம்

''இருமலுங் கூதலு மிளைப்பும் விக்கலும்
செருமலுஞ் சுரமன லென்னக் காய்தலும்
தருமுகங் கனத்தலுஞ் சிரமி டித்தலும்
உரைசெயுங் கபசய சுரம தாகுமே''

(போ-ரை):- இருமல், கூதல், இளைப்பு, விக்கல், செருமல், முகக் கனப்பு, தலையிடி ஆகிய உபத்திரவங்களுடன் அக்கினிபோல் சுரங் காயுந் தன்மையும் உளதாயின் இதனைச் சிலேற்ப சய சுரமெனச் சொல்லுக.

(வி-ம்).- சில காச சம்பந்தமான தேகிகளுக்குக் கால சுவாத்திய மாறுபாட்டால் இச்சுரமானது தோன்றிச் சுமார் ஒருவாரம் வரையில் உபத்திரவம் செய்து நீங்குந்தன்மையுடையது. ஆகலினால் இந்நூலாசிரியர் இதனைச் சாத்திய சுரங்களில் ஒன்றாகக் கூறியிருப்பினும் சில பிரகிருதிகளுக்கு யாப்பியமாகத் தொடர்ந்து நின்று பின் அசாத்திய நிலைமையை அடையுமாதலால் தக்க சிகிச்சை செய்து இதன் மூலகாரணத்தை நீக்கும் ஔஷதங்களைக் கையாள வேண்டியது அறிவாளிகளாகிய வைத்தியர்களின் கடமையாகும். இதன்விரிவைச் சிலேற்பனரோக நிதானத்திற் காண்க.

## 4. சிலேற்பன மாங்கிஷ உதிரிச்சுரம்

''பொருத்துத் தோறுமுளைந்து புண்போல நொந்துடலம்
வருத்த மிதுசுரமு மயக்கமோடு வாந்தியுமாய்ப்
பெருக்கும் பிரமை விக்கல் வேர்வையோடு பேதமுமாய்
இருக்குங் கபத்தின்மாங் கிஷ திரி யேனுஞ்சுரமே''

(போ-ரை):- உடம்பினுள்ள பொருத்துக்களிற் புண்ணைப்போல் நொந்து உளைந்து மிகவும் துன்பமுண்டாகும். இவற்றுடன் சுரம், மயக்கம், உவாந்தி, அறிவுகேடு, விக்கல், வியர்வையாகிய பல விகாரங்களைச் செய்வது சிலேற்பன மாங்கிஷஉதிரிச்சுரமெனவறிக.

## 5. சிலேற்பன கணசுரம்

'காயங் காயுங் கனக்கு மிருமலும்
தூய மாமுக மும்வெளுத் தோங்கியே
சாயம் போல மலசலந் தான்விடும்
ஆய சேற்ப கணசுர மாகுமே''

(போ-ரை):- உடம்பிற் சுரங்காயும். இருமலதிகரிக்கும். சுத்தமான அழகிய முகம் வெளுத்து அதைக்கும். சிவந்த நிறமாக மலசலங் கழியும். இது சிலேற்பன கணசுரமென அறிக.

## 6. சிலேற்பன நீர்த்தோஷசுரம்

''தாகமு மோக முண்டாய் மலமோடு சலமுங் கட்டிப்
பாகுறு மொழியி ளுய்கேள் பாண்டமு முகமும் வீங்கும்
மூகையா முதை விம்மி மூச்சுமு சென்றி னோக்கில்
வாதுற முன்னோர் சொன்ன கபதோஷ சுரமிதாமே''

(போ-ரை):- பாகு போன்ற இனிய மொழியை உடையவளே! கேட்பாயாக. தாகமதிகரித்து மலசலங் கட்டி, உடம்பும் முகமும் அதைக்கும். வயிற்றில் வாயு மிகுந்து பொருமி மூச்சு முட்டு உண்டாகும். இதனை முன்னோர் கபதோஷ சுரமெனக் கூறுவர்.

## 7. சிலேற்பன அத்திசுரம்

''சுரத்திலே பொரும லாகிக் கழிச்சலுந் தோடக்க மாகி
வருத்திடுந் தாக மென்மேல் நாவது வரட்சி யாகி
முருக்கிதழ் மின்னே தாகந் தாபமு முறையே யெய்தி
இருக்குமிக் குணங்கள் சேற்ப வத்தியிற் சுரமா மென்னே.

(போ-ரை):- முருக்கம்பூவை நிகர்த்த சிவந்த அதரத்தையுடையவளே! சுரம், வயிற்றிற் பொருமல், கழிச்சல் இவைகள் தோன்றி நாவரட்சி, தாகம், தாபம் முறையே கண்டு உபாதை செய்யுமாயின் இதனை நீ சிலேற்பன அத்திசுரமெனக் கூறுக.

## 8. சிலேற்பன அதிசாரசுரம்

''காயு மிருமுந் தொட்டைகட்டுங் கனக்கு முகமும் பொருமலுமாய்ப்
பாயுந் தண்ணீர்த் தாகமிகும் பலகா லுதர மிரைச்ச லுண்டாம்
வீயுங் கழிச்சல் புலானுறிப் புறங்கால் கைகள் வீக்கமுற்றால்
ஆயு மறைசொற் சுரசேற்ப வதிசா ரத்தின் குணமாமே''

(போ-ரை):- சுரங்காயும். இருமலுண்டாகும். முகமதைக்கும். வயிறு பொருமும். அதிக தண்ணீர்த் தாகமுண்டாகும். இடையிடையே வயிறிரையும். புலால் நாற்றமுடன் மலங்கழியும். புறங்கால் புறங்கை வீங்கும். இதனைச் சிலேற்பன அதிசாரசுரமென ஆயுள்வேதம் கூறும்.

# சூதக பந்த நோய்கள்

— வைத்தியர் க. வேலாயுதபிள்ளை —

மாதர்களுக்கு இச்சூதக அக்கிரமமே சந்தானோற்பத்திக்குக்கூடக் கெடுதியாயிருப்பதாலும், ஸ்திரிகளுக்குக் காணும் அநேக வியாதிகளுக்கு இதுவே வித்தாக இருப்பதாலும் இதைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்வது மிகவும் அத்தியாவசியமாக இருப்பதாலும் அதனையிட்டுச் சிறிது கூறுவாம்.

மாதாமாதம் ஸ்திரீகளுக்கு வெளியாகும் உதிரமானது முற்றிலும் அல்லது அளவில் குறைந்தாவது வெளிப்படாமற் போவதற்குச் சூதகபந்தம், சூதகக்கட்டு, சூதகவாய்வு அல்லது இரத்த பித்த குன்ம சூலையெனப் பலவித நாமங்கள் எங்கள் சித்தர் முதலியோர் சொல்லியிருக்கிறார்கள். இந்த ரோக உற்பத்திக்குப் பல காரணங்களுண்டு. அவையாவன: மாதாந்த ருதுவானது பெண்கள் கர்ப்பமாய் இருக்கும்போதும், பிள்ளைக்குப் பால்கொடுக்கும்போதும் நின்றுபோவது இயற்கையாயிருப்பினும், சிலருக்கு இயற்கை விரோதமாக இவ்விரு சமயங்களிலுங்கூடச் சூதகம் வெளிப்படுவதுண்டு. ஆனல் கர்ப்பகாலத்தில் காணும் சூதகமானது கருப்பையின் வாய் அடைபட்டிருப்பதால் யோனியிலிருந்து மாத்திரமே வரும். சில ஸ்திரீகளுக்குக் கருப்பையில் துர்மாமிசம் அல்லது விப்புருதி, பிளவை, ரணம் உண்டாயிருத்தல் அல்லது கருப்பையில் இயற்கைக்கு மாருன சூடு குளிர் அல்லது வாதபித்த சிலேற்றும முதலியவை அதிகரித்தலாலும், அளவுக்குமிஞ்சிய தேகப் பொருமலாலும், இரத்தக் குறைவாலும், தேகமெலிவாலும், வேறுவித நடைகளினாலும் இவைபோன்ற பல காரணங்களினாலும் இச்சூதகபந்த ரோகம் உற்பத்தியாவதுண்டு. இன்னும் கருப்பை வீக்கத்தினாலுண்டாகும் சூதகபந்தமுமுண்டு. அதன் குணமாவது: மலசலம் அதிகப் பிரயாசையோடு வெளிப்படுதல், ஜீரண சக்திக்

# பாலர் பரிபாலனம்

(முற்றொடர்ச்சி)

— க. வே. —

சிசுக்கள் வாய்பேசத் தெரியாத மதலைகள். அவர்கள் விஷயமாக அதிக சாக்கிரதையாக இருந்து அவ்வப்போது நம் குழந்தைகளுக்கு உண்டாகும் குணக்கேட்டிற்கு நம்வீட்டிலேயே உடன்செய்யக்கூடியதும் எங்கள் கைகண்டதும், செலவுச் சுருக்கமும், செய்வதற்கு இலகுவானதுமான சில முறைகளையும் கீழே தருகின்றோம்.

இப்படிக் கைமுறைகள் சென்ற சில இதழ்களிலும் வெளிவந்துள்ளன. அதனின் தொடர்பாகவே செங்கிரந்தி, கருங்கிரந்திக்குச் சில முறைகளை எல்லோரும் அறிந்திருக்க வேணுமென்னும் கருத்தோடு இதை எழுதுகிறேன். என்னகாரணத்தாலென்றால், மதலைகளை அநேகர் கவலையீனமான மருந்துமுறைகளால் அநேக வாதைக்குள்ளாக்கி, அவற்றில் சில பறிமுதலாகியும் போவது நாம் அனைவரும் ஒத்துக்கொண்ட விஷயமே.

ஆகையால் மேலே சொல்லிய இரு காரணங்களால் துன்பமடையாமல் ஏதோ நமது அறிவிற்கும் ஆற்றலுக்கும் எட்டியபடி பறிமுதல் இல்லாது காருங்கள்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

குறைவு, வாந்தி, கிறுகிறுப்பு, மயக்கம், தலைநோய், சுரம், அடிவயிறு, தொடை, கணுக்கால் முதலிய இடங்களில் வேதனை, முதுகெரிவு, அதிக வேதனையோடுகூடிய சுவாசம், நாடி படபடப்பாக ஓடுதல் முதலிய குணங்கள் காணப்படும். இவ்வித குணங்கள் இருந்து தக்க பரிகரிப்புச் செய்துகொள்ளத் தவறுவோர் கட்டாயம் காலரீதியில் பல சங்கடமான ரோகங்களால் அவஸ்தைப்பட நேரிடும் என்பதை நாம் மட்டுமல்ல, பல அறிவாளிகளும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றிலிருந்தே ஹிஸ்ரீறியா, கருப்பைக்கட்டி போன்ற கொடிய நோய்கட்கும் வழி பிறக்கிறது.

(தொடரும்)

பாலர் இப்படிப் பறிபோவதற்குப் பிரதானமானது செங்கிரந்தி, கருங்கிரந்தி ரோகமாகையால் இதனையுத் தேசித்தே நமக்குத் தெரிந்த கைமருந்துகள் சிலவற்றைக் கீழே தருகின்றேன்.

(1) மணித்தக்காளி இலை பலம் 1, பீச்சுவிளாத்தியிலை பலம் 1, கழற்சிக்கொழுந்து பலம் 1, நொச்சிக்கொழுந்து களஞ்சு 2, இயங்கமிலை கள. 2, தேவதாரு, பூககரப்பன் பட்டை, செஞ்சந்தனம், கருஞ்சீரகம், உள்ளி, வெங்காயம், சதகுப்பை இவைகள் ஒவ்வொன்றும் பலம் அரை. இவைகளை இடித்துப்போட்டு 2 படி தண்ணீர் விட்டு அரைப்படியாக வற்றக் காய்ச்சி வேளையொன்றிற்குச் சிறுதேக்கரண்டியளவு ஒருநாளைக்கு மூன்று தரம் கொடுத்துவரவும். ஆனல், பிள்ளையின் தேகத்தன்மைக்கும், நோயின் வன்மை மென்மைக்குந் தக்கவாறு கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

(2) செங்கரப்பன் கிரந்திக்கு: செப்புநெரிஞ்சில்சாறு கொஞ்சமும், வெங்காயச்சாறு கொஞ்சமும் எடுத்து நற்சீரகம் களஞ்சு 1 எடுத்து நன்றாக அரைத்து மேற்படி சாற்றில் கலக்கி வடிகட்டிப் புகட்டவும்.

(3) கரப்பன் வீக்கத்திக்குப் பூச்சுமருந்து: சாறணை, வசம்பு, பிஞ்சுக் கடுக்காய், கொத்தமல்லி, கோட்டம் இவை வகைக்கு 2களஞ்சு நிறையெடுத்துச் சுடுதண்ணீர் அல்லது எலுமிச்சம்புளி விட்டு அரைத்துப் பூசக் குழந்தைகள் கரப்பன் வீக்கம் சுகமாகும்.

(4) கரப்பன் தடித்தால்: பெருங்காயம், உள்ளி, கடுகு, சூடம் இவை வகைக்கு களஞ்சு 1. இவற்றைச் சுடுதண்ணீரில் அரைத்துப் போடக் கரப்பன் தடிப்புச் சுகமாகும்.

(5) நொச்சியிலை, தும்பையிலை,வேர், நாவற்கொழுந்து, பீச்சுவிளாத்தி இலை, குன்றியிலை, பிரமியிலை, நீர்முள்ளியிலை இவையொவ்வொன்றும் ஒவ்வொரு பிடி கொண்டு நன்றாக இடித்துப் பிழிந்து இந்தச்சாற்றில் 1 களஞ்சு

கருஞ்சீரகத்தை அரைத்துப்போட்டுக் கலக்கிக் கொடுக்கவும். மேலுக்கும் பூசிச் சுடுதண்ணீரில் ஒத்தணம் கொடுக்கவும். கரப்பன் சகலதும் தீரும்.

(6) இவற்றிற்கு எண்ணெய்: புளிநரளைக் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், மிளகு, உள்ளி, வசம்பு இவை வகைக்கு களஞ்சு 2 எடுத்து இடித்துக் காற்படி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசிவரக் கரப்பன் எனப்பட்டதெல்லாம் தீரும்.

---

## கருங்கிரந்தியின் குணமும் மருந்தும் (நா. பொ.)

குணம்: குழந்தை அலறியழுது மூலையுண்ணுது மூர்ச்சையாகும். உடல் வெதும்பும். கண் திறவாது. நாவரட்சி காணும். கீழுகடு, கைகால், தேகம் கறுப்பேறும். மலம் கட்டும். வயிறூதி வலி காணும்.

சிகிச்சை: (1) கழுதைப் பாலில், ஒருசத எடை ஓணன் இரத்தம் விட்டுக் கொடுக்க நிவர்த்தியாகும்.

(2) கழுதை லத்திச்சாறு, அவுரியிலைச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய் சமமாய்க் கலந்து அதில் வசம்பு, உள்ளி தட்டிப்போட்டுக் காய்ச்சிக் கொடுக்கக் குணமாகும்.

(3) ஆநெய், சிற்றாமணக்குநெய், நல்லெண்ணெய், இயங்கிலைச்சாறு சமமாய்க் கலந்து, அதில் சுக்கு, மிளகு அரைத்துப் போட்டு சூரிய புடம் வைத்து ஒருசத எடை உள்ளும் கொடுத்து மேலும் தடவி, செம்முள்ளி கிரந்தி நாயகன் நீரில் போட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்ட அந்நோய் தீரும்.

(4) ஆமணக்குநெய், தேங்காய்ப்பால், செம்பருத்திச் சாறு வகை படி 1. இவற்றைக் கலந்து காய்ச்சி வடித்து அதில் சுக்கு, கராம்பு, ஏலம், திப்பிலி, பூரம், மிளகு வகை களஞ்சு 1 வீதம் பொடித்துக் கலக்கி உள்ளும் கொடுத்து மேலும் பூசக் கிரந்தி பன்னிரண்டும், சூலை பதினெட்டும் குணமாகும்.

---

"மீனில் சுருவும் வெருமூலைப்பால் தரும்"

## பழைய நூல்களும், ஏட்டுப் பிரதிகளும்:

அகில இலங்கைச் சித்தாயுள்வேத வைத்திய சங்கத்தின் வெளியீடு II

தேரையர் அருளிச்செய்த

# நீர் நிறக்குறி நெய்க்குறி சாஸ்திரம்

மூலமும் உரையும் (8-ம் இதழ்த் தொடர்ச்சி)

---

### 4 நீரின் நுரை இயல்

நுரை அதிகரித்த நீர்.

பந்தமெய்ப் பசையி ளகப்படும் பருவத்
தந்தர்ப் பூதமா யநிலமூத் திரத்திற்
சம்பந் தப்படு ததிநுரைப் புனலே. 49

(பதவுரை):- மெய் பந்த பசை – உடற்கட்டின் (ஆதாரமான அவலம்பகம் தர்ப்பகம் கிலேதகம் சந்திகம் போதகம் எனப்பட்ட சிலேஷ்மப்) பசைப்பொருள்(கள்); இளக படும் பருவத்து–(நோய் முதலியவற்றால்) தளர்ச்சி ஆக்கப்படும் காலத்தில்; அந்தர் பூதமாய் – (ஆரும் அறியாதபடி உடம்பின்) உள் (நடக்கும் காரியங்களின்) விளைவாக; அநிலம் – வாயு(ஆனது); மூத்திரத்தில் சம்பந்த படும் ததி – சிறுநீரில் கலக்கும் சமயத்தில்; நுரை புனல் ஏ – நுரை க்குமிழிகள் பொருந்திய) மூத்திரமே (பெய்யப்படும்). [குறிப்பு: முன் 48-ம் செய்யுளில் கூறிய பசையும் இதுவும் பொருளால் வேறுபடுதல் காண்க].

நிற நுரை காணும் நீர்.

அந்நுரை பீதம் கருமைசேம் மைகளின்
மன்னுற நிறந்தரின் வருங்கா மாலையென்
றுன்னிப் புரப்ப ரொப்பிற் பிடகரே. 50

(ப-ரை):- அ நுரை – (மேற்கூறிய) அந்த நுரை(க்குமிழிகள்); பீதம் கருமை செம்மை கள் இன் மன்னு உறும் நிறம் தரின் – மஞ்சள் கறுப்பு சிவப்பு(ஆகிய இவைகளைப்போல பொருந்தியிருக்கும் நிறங்கள் காட்டினால்; காமாலை வரும் என்று உன்னி – காமாலை (என்னும் நோய் இனிமேல்) வரப்போகின்றது என்று கருதி; ஒப்பு இல் பிடகர் – (நூல் ஆராய்ச்சி மருந்துசெய்தல் சிகிச்சைத்திறமை முதலியவற்றில் தமக்கு) நிகர் இல்லாத வைத்தியர்கள்; புரப்பர் – (அந்த நோயை வரவிடாமற் தடுத்து உடம்பைப்) பாதுகாப்பர். [இது காமாலை முற்குறி நீராகும். (25-ம் செய்யுளை இதனுடன் ஒப்பு நோக்கவும்). தற்கால இங்கிலீஷ் வைத்தியப் பிரமாண அதி

காரிகள் (Drs. Savill. Price, Hutchinson முதலானவர்கள்) இதை முக்கிய குறியாகக் கூறுவர்].

நுரை குறைந்த நீர்.

நுரைதேய்ந் தொழுகுநீர் நுவலரு மும்மலங்
கரைய விளகிடுங் காலத் தென்னே. 51

(ப-ரை):- நுரை தேய்ந்து – நுரை(யானது) குறைந்து; ஒழுகு நீர் – இறங்கு(கின்ற) மூத்திரம் (காணப்படுவதெப்பொழுதென்றால்; நுவல் அரும் மு மலம் கரைய – சொல்லுதற்குஅரிய (வாத பித்த சிலேற்பனங்கள் எனப்படும்) மூன்று தோஷங்கள் குறைவதனால்; இளகிடும் காலத்து – (உடம்பின் வலிமை) தளர்வுறும் காலத்தில்; என் – என்று கூறுவாராக.

நீரின் நுரை இயல் முற்றிற்று.

## 5 நீரின் எஞ்சல் இயல்

அளவில் மிகக் குறைந்து இறங்குந் நீர்.

இயற்கைநீர் சுருங்கினு மிதுவுஞ் சலப்பொருள்
செயற்கையா யருந்தினுஞ் சிறுத்தநீ ரிதுவும்
பாண்டு நோய்ச்சம் பவத்தைத் தருமிதிற்
றாண்டுறுப் பேதியுஞ் சோர்வும் பிறக்குமே 52

(ப-ரை): இயற்கை நீர் – சுபாவத்தில் இறங்கும் சிறுநீரானது; சுருங்கின் உம் – (காரணம் ஒன்றும் தோன்றாமல் அளவில்) குறைந்தாலும்; இதுவும் – இத்தகைய (இயற்கைக்கு விரோதமான) சிறுநீரும்; சல பொருள் செயற்கை ஆய் அருந்தின் உம் – நீர்ப்பதார்த்தங்களை (விருப்பத்திற்கு மாறான) கூடிய அளவில் பருகினாலும்; சுருங்கிய நீர் உம் – குறைந்த (அளவிலேயே பெய்யப்படும்) சிறுநீரும்; (ஆகிய இவை இரண்டும்) பாண்டு நோய் சம்பவத்தை தரும் – பாண்டு வியாதியின் உற்பத்தியைக் கொடுக்கும்; இதில் – இந்த இரண்டு தன்மைகளிலும்; தூண்டு உறு பேதி உம் சோர்வு உம் பிறக்கும் – (எக்காரணங்களாலும் உந்தப்படாமல்) தானாக ஏற்படும் கழிச்சலும் ச அதியும் (முறையே) உண்டாகும்.

நீரின் எஞ்சல் இயல் முற்றிற்று.

### மதாந்தர நீர் நிறக்குறி

[இது தேரையர் கூறியதே. அவர்தம் காலத்திலுள்ள இதர ஆயுள்வேத நூல்களின் கருத்தையும் ஒப்பு ஒருமை நோக்கி இதில் சேர்த்திருக்கிறார்.]

வாத நோயின் நீர் நிறம்

பாண்டரி நெய்யரி பற்றிய நீரேலாந்
தாண்டரி நோயே தருமெனுஞ் சிலநூல். 53

(ப·ரை):- சில நூல் – சில (மதாந்தர) நூல்கள்; பாண்டு அரி – வெள்ளை நிறத்தையும்; நெய் அரி – உதிர(ச் சிவப்பு) நிறத்தையும்; பற்றிய நீர் எ(ல்)லாம் – பொருந்திய சிறுநீர்கள் எல்லாம்: தாண்டு அரி நோய் ஏ தரும் – தாவுகின்ற (பாய்ந்து நடக்கிற) வாத வியாதியையே கொடுக்கும்; எ(ன்)னும் – என்று கூறுகின்றன.

**பித்த நோயின் நீர் நிறம்**

கனிபொம்மன் மாசுக் கனிநிறம் போன்றுங்
கனத்தசௌ வீரக் களையது போன்றுஞ்
சனித்தவெண் ணெய்யின் றன்மையைப் போன்
சாரிய நீரிவை சீரிய மெய்க்குளாம் [றுஞ்
பித்தப் பிணியாற் பிறந்தன வென்றே
சித்தசா ரநவந் தெளிய விரிக்குமே. 54

(ப·ரை):- கனி பொ(ம்)மன்மாசு கனி நிறம் போன்றும்–(பழுத்துக்) கனிந்த பொம்மன்மாசுப் பழத்தின் (தோல்)நிறத்தைப் போன்றும்; கனத்த சௌவீர களை அது போன்றும் – பாரமுள்ள சவ்வீர (பாஷாண)த்தின் ஒளியைப் பொருந்தியும்; சனித்த (-ஜெனித்த) எள் நெய் இன் தன்மை ஐ போன்றும் – (ஆலையில் அல்லது செக்கில் இருந்து அப்பொழுது) பெறப்பட்ட (நல்) எண்ணெயின் நிறத்தை ஒத்தும்; சாரிய நீர் இவை – இறங்குகின்ற நீர்களான இவைகள்; சீரிய மெய் கு உள் ஆம் – சிறப்புள்ள உடம்புக்குள் உண்டாகிய: பித்த பிணி ஆல் – பித்த (கோளாறடைந்த) நோயால்; பிறந்தன என்று ஏ – உண்டாகின என்பதாகவே; சித்தசாரநவம் தெளிய விரிக்கும்–'**சித்தசாரநவம்**' என்னும் மதாந்தர நூல் விளக்கமாக விரித்துரைக்கும். (பொம்மன்மாசுப்பழம் – கிச்சிலிப்பழம் போன்ற பெரியபழம் – pompelmoose or shaddock fruit)

**பித்தம் காமாலைநோய் இவற்றின் நீர்நிறம்.**

மந்திரி நிறமாய் வரப்படு நீரு
முந்திய வேருவையை யொத்துகு நீரு
பித்தகா மாலைக ளாற்பிறந் தனவெனச்
சித்திய வித்தியா தரஞ்சேப் பும்மே. 55

(ப·ரை):- மந்திரி நிறம் ஆய்–பித்தத்திற்குரிய (மஞ்சள்)நிறமாக; வர படு நீர் உம் – இறங்குகின்ற சிறுநீரும்; உந்திய எருவை ஐ ஒத்து உகும் நீர் உம் – (செலுத்தித்) தள்ளுகின்ற இரத்தத்தைப் போல இறங்குகின்ற சிறுநீரும்; பித்த காமாலைகள் ஆல் பிறந்தன என – பித்தத்தி(ன் கோளாறி)னாலும் காமாலை நோயாலும் பெறப்

பட்டன என்று; சித்திய வித்தியாதரம் செப்பும் – 'சித்தியவித்தியாதரம்' (என்னும் மதாந்தர நூல்) கூறுகின்றது.

சிலேற்பன நோயின் நீர் நிறம்.

அருச்சுனத் தொடுநுரை புற்புத மெழினு
மருந்துநீ ரொக்கினு மவியினை யொக்கினுங்
கலப்பெழி லுறினுமக் காண்டங் கபநோய்
தலைப்படுங் காலைச் சாரு மென்பரே. 56

(ப-ரை):- அருச்சுனத்து ஒடு – வெள்ளை (நிறத்தன்மை)யுடன்; நுரை புற்புதம் எழின் உம் – நுரைகளும் குமிழிகளும் கிளம்பினும்; அருந்தும் நீர் ஒக்கின் உம் – உண்ணும் தண்ணீரைப்போல (உப்புச்சுவை அற்று நிறமும் அற்று) இருந்தாலும்; அவி இன் ஐ ஒக்கின் உம் – நெய்யைப்போல் இருந்தாலும்; கலப்பு எழில் உறின் உம் – சேர்க்கை நிறங்கள் பொருந்தி இருந்தாலும்; அ காண்டம்– அவ்வித சிறுநீர்(கள்); கப நோய் தலை படும் காலத்து சாரும் – சிலேற்பன வியாதிகள் மேற்படும் நேரங்களில்(வந்து நோயாளியை) அணுகும்; என்பர் – என்று (மதாந்தர நூலோர்) சொல்லுவர்.

கலப்பு நிற நீர்கள் காட்டும் தனி நிறம்.

இன்னுமம் மதமே இருதொந் தநீழனீர்
தன்னிற் கருமைச் சாயையுண் டென்னுமே, 57

(ப-ரை):- இன்னும் அ மதம் ஏ–இன்னமும் அக்கொள்கையுள்ள (நூல்களான)வையே; இரு நீழல் தொந்த நீர் தன்னில் – இரண்டு நிறங்கலந்த சிறுநீரின் இடத்தில்; கருமை சாயை உண்டு என்னும்– கறுப்புநிறம் உண்டாயிருக்குமென்று கூறுகின்றன. [குறிப்பு 'நிறங் கலந்த நீர்' என்பது மஞ்சள் சிவப்பு பச்சை ஆகிய நிறங்கள் (இரண்டிரண்டாகத்) தம்முள் கலத்தல், 'இரும் தொந்த' என்ற ஒரு பாட பேதத்துக்கு—'பெரிய நிறக்கலப்பு' என்றும் உரைகொள்ளலாம்.]

பிரமேகம் பெருநோய் இவைகளின் நீர் நிறம்.

புண்ணீர் மேகப் புன்கண் மாப்பிணி
நண்ணி னித்திய நாதீய மாமெனும் 58

(ப-ரை):- நித்தியநாதியம் – 'நித்தியநாதீயம்' (எனும் மதாந்தர நூலானது); புண்ணீர் நண்ணில் – இரத்தம் (சிறுநீரில்) பொருந்தி(க் காணுமா)னல்; மேக புன்கண் மா பிணி – பிரமேக வியாதியும் வேறு பெரும் நோய்(களும்); ஆம் எ(ன்)னும் – உண்டாகும் என்று கூறுகின்றது.

காய்ச்சலின் நீர் நிறம்.

சுரப்பிணி யரிசனத் தோயங் காட்டுமே. 59

(ப-ரை):- சுர பிணி – காய்ச்சல் நோய்(ஆனது); அரிசன தோயம் – மஞ்சள் (நிறமுள்ள) சிறுநீரை; காட்டும் – காண்பிக்கும்.

அசாத்தியமான நீரின் இயல். சுரமேனு மேகத் துனியேனு மிருக்கிற்
பெருகிய மூத்திரம் பிரிக்கு முயிரையே. 60

(ப-ரை) - சுரம் ஏனும் – காய்ச்சலாவது; மேக துனி ஏனும் – பிரமேகநோயாவது; இருக்கில்-(கண்டு)இருக்கும்பொழுதில்; பெருகிய மூத்திரம் – (கட்டுமட்டின்றிப்) பெய்யப்படும் சிறுநீரானது; உயிர் ஐ பிரிக்கும் – உயிரை (உடம்பினின்றும்) வேறுபடுத்திவிடும் (அதாவது மரணத்தைத் தரும்.)

நோய் அணுகா விதி. நிதந்தினக் கிரம நெறிசென் றொழுகிற்
சுதங்கா ணாராய்ச் சுகித்துறை வாரே 61

(ப-ரை):- நிதம்தின கிரம நெறி–நாடோறும் (நாள் ஒழுக்க விதி முறைகளைக் கூறும்) 'தினக்கிரமாலங்காரம்' என்னும் வைத்திய நூலின் ஒழுக்கமுறைகளை; சென்று ஒழுகின் – (பின்பற்றி)நடந்து வந்தால்; சுதம் காணார் ஆய்–அழிவு (சாவு) காணாதவர்களாக; சுகித்து உறைவார் – இன்பம் அனுபவித்து வாழ்வார்கள்.

மதாந்தர நீர் நிறக்குறி முற்றிற்று.
இத்துடன் தேரையர் நீர் நிறக்குறி முற்றும்.

குறிப்பு:- பின்வரும் செய்யுட்களில் கூறிய நீர் நிறக்குறிகளை உணர்த்தும் வேறு மதாந்தர (இங்கிலீஷ் வைத்திய) நூலாரின் சில பெயர்களாவன:- 15-ம், 17-ம் செய்யுட்களில் கூறிய நீர் நிறக்குறிகளை haemoglobinuria என்றும்; 16-ம், 58-ம் செய்யுட்களில் கூறியவற்றை haematuria என்றும்; 26-ல் கூறியதை methaemoglobinuria என்றும்; 27-ல் கூறியதை haematoporphyrinuria என்றும்; 31-ல் கூறியதை chyluria என்றும்; 32-ல் கூறியதை phosphaturia என்றும்; 33-ல் கூறியதை pyuria என்றும்; 34-ல் கூறியதை spermaturia என்றும்; 38-ல் கூறியதை lipuria என்றும்; 46-ல் கூறியதை acetonuria என்றும்; 50-ல் கூறியதை choluria என்றும் கூறுவர்.

[அடுத்த இதழில் தேரையர் நெய்க்குறி சாஸ்திரம் தொடங்கப்படும்.]

---

"தோகை மோகிக்க தொடுமயிர் மாணிக்கம்"
(மயிர்மாணிக்கம் ஆண்மையைத்தந்து பெண் இச்சையுறச்செய்யும்)

# வைத்தியமும் ரஸாயனமும்.

— பண்டிதர் ச. இராமச்சந்திரன், வைத்தியன். —

இவ்வுலகில் கணக்கில்லாத பொருள்கள் உள்ளன. ஆனால் அவைகளெல்லாம் சுமார் 92பொருள்களாலேயே உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் 92 பொருள்களும் மூலப்பொருள்கள் எனப்படும். மூலப்பொருள்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பல புதிய பொருள்களைத் தருகின்றன. இப்படி உண்டாகும் புதிய பொருள்கள் சேர்க்கைப் பொருள்கள் எனப்படும். மூலப் பொருள்களையுஞ் சேர்க்கைப் பொருள்களையும் பற்றிய உண்மைகளைக் கூறும் நூல் ரஸாயன நூல் எனப்படும். இதற்கு ஆங்கிலத்தில் 'கெமிஸ்றி' என்பது பெயர்.

இரஸாயன நூலின்படி பொருள்களெல்லாம் மூலப் பொருள்களெனவும், சேர்க்கைப் பொருள்களெனவும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். வைத்தியத் துறையில் உபயோகிக்கப்படும் பாஷாணங்கள், உப்புகள், திராவகங்கள் முதலியன இந்த இரண்டு பிரிவுக்குள் அடங்கும். ஆகவே, இரஸாயன நூலிலுள்ள முக்கியமான விதிகளை நாம் அறிந்துகொண்டால் அவை மருந்துகள் செய்யும்போது நமக்கு ஒரு விளக்கைப் போல உதவும்.

மூலப்பொருள்கள் ஒன்றுசேர்ந்து சேர்க்கைப்பொருள்களைத் தருகின்றன எனக் கூறினோம். சேர்க்கைப் பொருள்களை மறுபடியும் மூலப்பொருள்களாகப் பிரிக்கலாம். ஆனால், மூலப்பொருள்களை ஒருபோதும் பிரிக்க முடியாது. உதாரணமாக இரஸம் ஒரு மூலப்பொருள். கந்தகம் ஒரு மூலப்பொருள். இரஸமுங் கந்தகமுங்கூடி லிங்கம் என்னும் ஒரு சேர்க்கைப் பொருளைத் தருகின்றன. லிங்கத்திலிருந்து இரஸத்தையும் கந்தகத்தையும் வேறுவேறாகப் பிரித்து எடுக்கலாம். ஆனால் இரஸத்திலிருந்தோ அல்லது கந்தகத்திலிருந்தோ வேறொரு பொருளையும் பிரித்தெடுக்க முடியாது. ஏனென்றால் இரஸமுங் கந்தகமும் மூலப்பொருள்கள் அவைகள் தனியே உள்ளன. அவைகளில் வேறொரு பொருளும் இல்லை. இரஸத்தில் இரஸம்தான் உள்ளது. கந்தகத்திற் கந்தகந்தான் உள்ளது. மற்ற மூலப்பொருள்களிலும் இப்படியே. மூலப்பொருள்களில் வேறொன்றும் இல்லாதபடியால் அவைகளைத் தனிப்பொருள்கள் என்றே இனிக் கூறுவோம்.

கல்லைப்போலக் கட்டியான பொருள்கள் திடநிலையிலுள்ள பொருள்கள் என்றும், தண்ணீரைப் போன்ற பொருள்கள் திரவநிலையிலுள்ள பொருள்கள் என்றும், காற்றைப் போன்ற பொருள்கள் வாயுநிலையிலுள்ள பொருள்கள் என்றுஞ் சொல்லப்படும்.

தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் தனிப் பொருள்கள் (மூலப்பொருள்கள்). கந்தகம், கரி முதலியனவும் தனிப்பொருள்களே. ஆனல், அவை உலோகங்களல்ல. உலோகமல்லாத தனிப்பொருள்களை அலோகங்கள் என்று சொல்லுவோம். உலோகங்களும் அலோகங்களும் கூடித்தான் முக்கியமான சேர்க்கைப் பொருள்களைத் தருகின்றன. உதாரணமாக இரஸம் ஓர் உலோகம். கந்தகம் ஓர் அலோகம். இவை இரண்டுங் கூடி லிங்கம் என்னும் சேர்க்கைப் பொருளைத் தருகின்றன. பித்தளை, வெண்கலம் முதலிய கலப்பு லோகங்கள் தனிப்பொருள்களாக மாட்டா. சுத்தமான உலோகங்களே தனிப்பொருள்கள் எனப்படும்.

உலோகங்கள் எல்லாம் திடநிலையிலுள்ளன. இரசமும் ஒரு உலோகமே. ஆனல், அது திரவநிலையிலுள்ளது. பிராணவாயுபோன்ற சில அலோகத் தனிப்பொருள்கள் வாயுநிலையிலுள்ளன. கந்தகம்போன்ற அலோகத் தனிப்பொருள்கள் திடநிலையிலுள்ளன. 'ப்ரோமின்' என்னும் ஓர் அலோகம் மாத்திரம் திரவநிலையிலுள்ளது. அது ஒரு தனிப்பொருள். அதன்நிறம் சிவப்பு.

தனிப்பொருளைச் சிறுசிறு துண்டுகளாக உடைக்கலாம். அத்துண்டுகளை மேலும் உடைத்துக்கொண்டே போனல் அவை கடுகளவு சிறிய துண்டுகளாகும். அவைகளையும் உடைத்தால் மண்ணைப் பார்க்கினும் நுண்ணிய பொடிகளாகும். அப்பொடிகளை இனி உடைப்பது கஷ்டம். ஆயினும் அவைகளை இன்னும் உடைத்துக்கொண்டே போகமுடியுமானல், அவைகள் இனிமேல் உடைக்க முடியாதபடி மிகவும் நுண்ணிய அணுக்களாகப் பிரிந்துவிடும். அவ்வணுக்கள் பரமாணுக்கள் எனப்படும். பரமாணு என்பதற்கு மிகவும் நுண்ணிய அணு என்பது கருத்து. தனிப்பொருள்கள் திடநிலையிலிருந்தாலுஞ் சரி; திரவநிலையிலிருந்தாலுஞ் சரி; வாயுநிலையிலிருந்தாலும் சரி; அவைகளெல்லாவற்றிலும் இப்பரமாணுக்களிருக்கும். பல பரமாணுக்களின் கூட்டம் ஓர் அணு எனப்படும். தனிப்பொருளின் பரமாணுக்கள் பல கூடிச் சேர்க்

# நரம்புகளின் உற்பத்தி வரலாறு 5.

— வைத்தியர் ஆ. கனகரத்தினம், கொழும்பு. —

நரப்புத்தும்புகளின் அந்தலேகள் (Termination of N. Fibres): -

சூடு, குளிர், நோ போன்ற உணர்ச்சிகளால் வெளி உலகுடன் சம்பந்திக்கும் வெளிப்பாகங்கள் சரீரம் முழுதும் ஏராளமாகப் பரவியிருக்கின்றன. பிரதானமாக ஆசயங்களின் உணர்ச்சிகளேக் கொண்டுசெல்லும் விசேடமான அந்தலேகள், மின்சார சக்தியைக் கொண்டுசெல்லும் கம்பிகள் றபரினல் கவசம் செய்யப்பட்டிருப்பதுபோல இவையும் கவசப்பட்டிருக்கும். இன்னும் இந்நரம்பு அந்தலேகள் தம் தொழிலுக்சேற்றபடி அமைந்தும் கவசப்பட்டும் இருக்கின்றன. இவைகளேப்பற்றி விவரிப்பின் விரியும். ஆனல், அவற்றைப் படித்து அறிந்தால் நரம்புமண்டலத்தின் அரிய பெரிய விஞேதச் செய்கைகள் சக்தி அடைவதற்காகவே அவை அப்படி அமைந்துளவென்பது நன்கு புலப்படும். இன்னும் தற்கால சாஸ்திர வல்லோர் கண்டுபிடித்தது "கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்பதை ஒக்கும்.

நரம்பு மண்டலத்தின் பிரிவுகள்:— கெற்பத்தில் சிசு வளர்ந்து கொண்டிருக்கும்போது ஏற்படும் விஞேதமான பிரிவுகளில் நரம்பு

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கைப் பொருளின் ஓர் அணுவை உண்டாக்கும். ஓர் அணுச் சேர்க்கைப் பொருளிற் குறைந்தது இரண்டு பரமாணுக்களாவதிருக்கும். ஓர் அணுலிங்கத்தில் ஒரு பரமாணு இரஸமும், ஒரு பரமாணு கந்தகமும் சேர்ந்திருக்கும்.

தனிப்பொருட்கள்தான் பரமாணுக்களாக இருக்க முடியும் சேர்க்கைப் பொருட்கள் அப்படி இருக்க முடியாது. ஏனென்றல் ஒரு சேர்க்கைப் பொருளிலே பல தனிப்பொருட்களின் பரமாணுக்கள் கூடி அணு ஆகி விடுகின்றன. அதனல், சேர்க்கைப் பொருட்கள் அணு நிலையில் மாத்திரம் இருக்கும். ஆகையால் ஒரு பரமாணு கந்தகம் என்று சொல்லலாம்; ஒரு பரமாணு இரஸம் என்று சொல்லலாம்; ஆனல், ஒரு பரமாணு லிங்கம் என்று சொல்லக்கூடாது. ஏனெனில், அது ஒரு சேர்க்கைப்பொருள். ஓர் அணு லிங்கம் என்று மாத்திரம் சொல்லலாம்.

(தொடரும்)

மண்டலத்திற்கென 3 கொப்புளங்கள் போன்ற திரட்சிகளுண்டாகி விருத்தியடைந்து மூளையாகின்றன. கெறபத்தின் 4-வது கிழமையளவில் மூளையின் முற்பக்கம் சரி நேர்பாதியாகப் பிரியத் தொடங்கும். இவை படிப்படியாய் அதிகமாய் விருத்தியடைந்து "கோட்டெக்ஸ்" எனும் பாகமாகிக் "கோப்பஸ் ஸ்றியேற்றம்" எனும் பாகங்களாய் விருத்தியடைகின்றன. மேற்கூறிய 3 கொப்புளங்களை முறையே செறிபிறம் (அ) முன்மூளையெனவும், மிட்பிறெயின் (அ) நடுமூளையெனவும், 'பொன்ஸ்', 'செறிபெல்லம்', 'மெடுலா ஒப்லோங்காற்ரு' இவைகளைப் பின்மூளையெனவும் கூறப்படும். இவையனைத்துமே மண்டையோட்டினுள் இருக்கும் மூளையெனப்படும். இவைகள் 3-உம் முதன் முதலாய் அடைந்திருந்த மூலாதார நரம்புக்குழாய் (அ) நியூறல் ரியூப்பிலிருந்து முள்ளந்தண்டு நரம்பு உற்பத்தியாகின்றது.

இது குழாயிலிருந்து உற்பத்தியானதால் முள்ளந்தண்டும் குழாயாகவேயிருக்கின்றது. நடுமூளையும் பொன்ஸ் செறிபெல்லம், மெடுலா ஒப்லோங்காற்ரு முதலியனவும் மேலேயிருக்கும் செறிபிறத்தைக் கீழேயிருக்கும் முள்ளந்தண்டுக் கொடியுடன் இணைக்கின்றன. மூளையும்-முள்ளந்தண்டுக் கொடியும் சேர்ந்து சென்றல் நேவஸ் சிஸ்ரேம் (மத்திய நரம்புத்தொகுதி) எனப்படும். மூளையிலிருந்து கிளம்பும் 12 சோடி சிரோநரம்புகளும், முள்ளந்தண்டின் கொடியிலிருந்து கிளப்பும் 31 சோடி முள்ளந்தண்டு நரம்புகளும் சேர்ந்து பெரிவேறல் நேவஸ்சிஸ்ரேம் (வெளிநரம்புத்தொகுதி)என அழைக்கப்படும். முன்னரே இந்நரம்புக் கிரமங்களைச் சோமற்றிக் - விஸறல்' (அதாவது ஏனைய உறுப்புக்களையும் - ஆசயங்களையும் சார்ந்தவை) எனக்கூறியுள்ளோம். இவ்விரு கூட்டுறவுத்தொழில் நரம்புகள், மத்திய - வெளிநரம்புத் தொகுதிகட்குத் தொடர்புடையவை. மத்திய வெளிநரம்புத் தொகுதிகளின் சோமற்றிக் கூட்டுறவுகளைச் 'செறிபிறோ - ஸ்பைனல் சிஸ்ரெம்' (மூளைத்தண்டுத் தொகுதி) என்றும், ஆசயத்தொழில் முழுவதையுங் கொண்ட கூட்டுறவுத் தொகுதிகளை 'ஓற்ரோனொமிக் சிஸ்ரெம்' (சுதந்திரத்தொகுதி) என்றும் அழைக்கலாம். சுதந்திரத் தொகுதிக்கோ கணுக்களோடு கூடிய 2 நரம்புமூலங்களுண்டு. இவைகளைச் 'சிம்பதெற்றிக் றங்ஸ்' (அநுதாப நரம்பு மூலங்கள்) எனப்படும். இவை முள்ளந்தண்டு எலும்புக்கோர்வையின் முற்புறத்தில் வெளிப்பக்கமாய் முதல் முள்ளந்தண்டு எலும்பாகிய "அற்லஸ்" தொடங்கிக் "கொக்கிக்ஸ்" எனும் கடைசி எலும்பு வரையும் காணப்படும். இவ்விரு அனுதாப நரம்பு மூலங்களும் ஆசயங்களின் 1-ம் மார்புப் பக்க முள்ளந்தண்டெலும்பு தொடங்கி 2-ம், 3-ம் இடுப்பெலும்பு இறுதியாகவுடைய முள்ளந்தண்டு நரம்புக் கொடியிலிருந்துவரும் ஆசய வெளிக் கூட்டுறவுகளை ஏற்கின்றன. இவ்வாசய வெளிக்கூட்டுறவுகளை 3-ம், 7-ம்,

9-ம், 10-ம், 11-ம் சிரோ நரம்புகளும், 2-ம், 3-ம் சிலசமயம் 4-ம் சேக்றல் நரம்புகளும் தாந்தாமே அனுப்பிக்கொள்ளுகின்ற இயல்பும் உள்ளவையாயிருக்கின்றன. இவ்விதம் அனுப்பப்பட்ட நரம்புகளின் செய்கைகளும், அநுதாப நரம்புகளினின்றும் எழும் செய்கைகளும் ஒன்றுடனொன்று மோதிக்கொள்வதுமுண்டு. சில அவுடதங்கட்கு இவை ஒன்றுக்கொன்று வித்தியாசமாய்த் தொழில் செய்வதுமுண்டு. சுதந்திரத் தொகுதிகள் இரு இனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவை:- சிம்பதெற்றிக், பரசிம்பதெற்றிக் (அநுதாப உபஅநுதாப என்பன அநுதாபஇனத்தில் கணுவுள்ள இரு நரம்புமூலங்களும், மற்றுமநேக கணுக்களும், கிளைகளும் காணப்படும். பரசிம்பதெற்றிக் இனத்தில் சிரோ - சேக்றல் நரம்புகளிலிருந்து வெளியாகும் ஆசய வெளித்தொகுதிகள் காணப்படும். சுதந்தர தொகுதியில் ஒரு விசேடம் என்னவென்றால் மத்திய நரம்புத் தொகுதியிலிருந்து கிளம்பும் வெளிநரம்புத் தும்புகள் மூளை - முள்ளந்தண்டு நரம்புகளைப்போல் இலக்கங்கட்கு நேராகச் செல்வதில்லை. அவை ஒரு கணுவில் தங்கி அங்கிருந்து வெளியே அனுப்பப்படும். சுதந்திரத் தொகுதிக்கும் - மூளை முள்ளந்தண்டுத் தொகுதிக்குமுள்ள உள்நோக்கும் தும்புகளில் ஒரு வித்தியாசமுமில்லை. அவை ஒரு தடையுமின்றிக் கணுக்களைத் தாண்டி, முள்ளந்தண்டு (அ) சிரோ நரம்பிலுள்ள உணர்ச்சி வேரிலிழிக்கும் கணுக்களையடைகின்றன.

(அ) = அல்லது.

(தொடரும்)


## செ. சிவக்கொழுந்து & சன்

மருந்துச்சரக்கு வியாபாரம்

52, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.

ஸ்தாபிதம் :- 1923

மருந்துச் சரக்கு வியாபாரத்தில் நீண்டகால அனுபவம்.

எங்களிடம் உயர்ந்த தரமானதும் புதிதானதுமான எல்லாவித மருந்துச் சரக்குகளும், கோரோசனை கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகு, பச்சைக்கற்பூரம், முதலியவைகளும், அபிஷேக திரவியங்களும்

சகாயமான விலைக்குப்

பெற்றுக்கொள்ளலாம்.

# மருந்துச் சரக்குகள்

சகலவிதமான
உயர்ந்த மருந்துச் சரக்குகளும்
எங்களிடம்
நிதானமான விலைக்குக் கிடைக்கும்.

ஸ்பெயின் தேசத்துக் "குங்குமப்பூ"
எங்களுக்கு நேரில் வருகிறது.
வந்து வாங்கிப் பாருங்கள்!

கோரோசனை, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி,
மற்றும் பாஷாணச் சரக்குகள்,
சுத்தமான நெல்லிக்காய்க் கெந்தகம், ரசம்
யாவும் நேரில் தருவித்து நயத்தில் தருகின்றோம்.

ஒருதடவை பரீட்சித்துப் பாருங்கள்!

**கே. இரத்தினசபாபதி அன் சன்ஸ்,**
131, கே. கே. எஸ். ரோட்,
பெரியகடை :: யாழ்ப்பாணம்.




2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25. 4 அவுஸ்ன் சீசா ரூ. 5-50.

## லெக்ஷ்மி விலாஸ்
## சைவாள் காப்பி ஹோட்டல்

★ நவீன மிட்டாய்கள்
உயர்ந்த பலகாரங்கள் ★

சுத்தம்—சுகாதாரம்—தூய்மை எங்கள் உணவில் காண்க.

---

சுத்தமான நெய்யில் எங்கள் பட்சணங்கள்
சுவைகனிந்து இன்பந்தரும்.

எஸென்ஸ் காப்பி—மல்லிக் காப்பி—தேனீர்
மற்றும் பலவித பானங்களைப் பருகி
—ஆனந்தியுங்கள்.—

**தில்லைவனம்பிள்ளை — காப்பி ஹோட்டல்**
205, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்

*Remember !*

*Tele* { Grams. "RODIS"
Phone: 291

# ROYAL DISPENSARY

Opposite Civil Hospital, (O. P. D.) JAFFNA.

FOR YOUR

PATENT MEDICINES & MIXTURES

OPENED DAILY INCLUDING SUNDAYS.

★

கலவை மருந்து வகைகளுக்கு

யாழ்ப்பாணம் அரசினரின் (புதிய) ஆஸ்பத்திரிக்கு எதிரேயிருக்கும்

"ரோயல் டிஸ்பென்சறி"யை நினையுங்கள்!

தினமும் (ஞாயிறு உட்பட) திறந்திருக்கப்படும்.

## 'வைத்தியன்' சந்தா விபரம்

இலங்கை, இந்தியா வருட சந்தா ரூபா 5-00
,, ,, தனிப் பிரதி சதம் 50 (அணா 8)
,, ,, சீவியசந்தா ரூபா 50-00

சந்தாப்பணம் அனுப்புதல், பத்திரிகை கிடையாதது அறிவித்தல், விளம்பர விஷயங்கள், ஏஜென்ஸி கோருதல் முதலியவற்றிற்குச் செயலாளருக்கு எழுதவும்.

விலாசம்:

வைத்தியர் **S. A.** இராசையா (செயலாளர்),
174, கோவில் தெரு, நல்லூர்.
யாழ்ப்பாணம், சிலோன்.

Regd. as a News paper
in Ceylon.

January 1951

*Cables for all our offices* **Jewellers** *T'phone:* **161**

# L.K.S. LEBBAY Bros.

## GOLD HOUSE

69, KANNATHIDDY

JAFFNA

*Biggest Manufacturing Jewellers*

**Direct Importers of**

## Gold, Silver, Diamonds

**and**

## Goldsmiths' Tools

*Branches* { **137, 2nd Cross Street, Colombo Phone 5658**
**145, Big Bazaar Tiruchirapally. Phone 49**

## 'எல் கே. எஸ்.'

இலங்கையின் புகழ்வாய்ந்த நகை வியாபாரிகள்

அநேகவிதமான கைக்கடிகாரங்கள் உயர்ந்த ரகம் – நாகரீகமான பலவித மாதிரிகளில் சகாய விலையில் கிடைக்கும். தயவுசெய்து ஒருமுறை பார்வையிடுங்கள்

**69, கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.**

Edited by Vaidyar K. S. Paripurnananda.
Printed at Sri Parwathi Press, 288. Hospital Road, Jaffna,
and Published by Vaidyar S. A. Rasaiya, 174, Temple Rd., Nalloor, Jaffna
for The All Ceylon Siddha Ayurveda Medical Association.